05.03.2026

O.S.No. 118/2014

DW1- குமார்பாண்டியன் த/பெ. செல்வராஜ்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.03.2026

குறுக்குவிசாரணை (வாதி தரப்பில்)

1. நான் தாக்கல் செய்துள்ள விசாரணை உறுதிக்கூற்று இலஞ்சி பேருராட்சிக்காக தாக்கல் செய்தது என்று துலங்காது என்றும் அதை நான் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்தேன் என்றல் சரியல்ல. சாட்சியிடம் முதல் விசராணை வாக்குமூலத்தை காட்டி இலஞ்சி பேருராட்சிக்காக தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இலஞ்சி பேருராட்சியில் 22.08.2024 முதல் நாளது தேதி வரை நான் பணியாற்றி வருகிறேன். என்னுடைய வீட்டிலிருந்து பிராது தபசில் சொத்து 300 மீட்டர் தொலைவில் தான் உள்ளது என்றால் அதற்குள்ளாகவே உள்ளது. நான் இலஞ்சியை சார்ந்தவன் என்றால் பிராது தபசில் பற்றி தெரியும் என்றால் சரிதான். நான் இலஞ்சி பேருராட்சியில் பணியில் சேரும் முன்னர் பிராது தபசில் பற்றி தெரியாது என்றால் சரிதான். 2 வது பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல நான் படித்து பார்த்தேன். பிராது தபசில் சொத்தை வாதிக்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்கிறார் ஆனால் அவருடன் சேர்ந்து மொத்தம் 8 பேர் பிராது தபசில் சொத்தும் அதை சேர்ந்தனையாக உள்ள பிற நபர் சொத்துக்களும் பேரூராடட்சிக்கு தர தயாராக இருந்தனர் அதில் 5 பேர் ஒப்படைத்துவிட்டனர் வாதி மற்றும் 2 நபர்கள் ஒப்படைக்கவில்லை அதனால் எங்களால் பேரூராட்சி சார்பாக சாலை வசதி செய்து தரவில்லை. நாங்கள் என்ன பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் வழக்கின் செலவு தொகையை கேட்டுள்ளோம். பொதுவாக சொத்து யாருக்கெல்லாம்

பாத்தியப்பட்டதோ அவர்கள் அனைவரும் எழுதிக் கொடுத்தால் மட்டுமே உரிமம் மாறும் என்றாலும் அதை எழுதிக் கொடுக்காத நபர்களை பொறுத்த கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண் தவறாக உள்ளதால் தாக்கல் செய்துள்ளேன். பிராது தபசில் சொத்தை பொறுத்து வருவாய் ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பிரது தபசில் சொத்தை பொறுத்து பட்டாவோ இதர ஆவணங்களோ இல்லை என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்று துலங்காது என்றால் சாட்சி பி.வா.சா. ஆ.1 ஆவணத்தை படித்து பார்த்து விகிதாச்சாரப்படி துலங்காது என்றும் மொத்தமாக தான் துலங்கும் என்றார்.

மேற்படி மொத்தமாக குறிப்பிட்டுள்ள விஸ்தீரணத்தில் வாதி மற்றும் பி.வா.சா.ஆ.1 வது ஆவணத்தில் இல்லாத தரப்பினருக்கும் சொத்து உள்ளது என்றால் சரிதான். பி,வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ள 1 வது நபர் மூக்கன் ஆகிய இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி 25.02.1999 தேதிய கிரைய ஆவணத்தின் படி கிடைக்கபெற்ற ஒரு பகுதியை எழுதிக் கொடுத்த சொத்து என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மூக்கன் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் ஆவணம் என்றால் சரிதான். சாட்சியிடம் காட்சிய மேற்படி ஆவணத்தின் எண்,121/1999, நாள் 25.02.1999 1ம் இணை சார்பதிவாளர் அலுவலகம் தென்காசி. என்னிடம் காட்டிய மேற்படி ஆவணத்தில் தபசில் விவரத்தில் சொத்து விவரத்தில் திருமலை வேளார் முற்றம் பாதிக்கும் வடக்கு எல்கை என்றால் முற்றம் என்பது பொது நடைபாதையை குறிக்கிறது. முற்றம் என்பது எதிரெதிரே உள்ள இரண்டு நபர்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது

என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தின் படிதான் தபசில் சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்டுகிறது. மேற்படி வா.சா.,ஆ.9 ஆவணத்தில் 2ம் தபசில் சொத்திற்கு வடபுறம் காலியிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த காலியிடம் தான் ராஜேந்திரன் மற்றும் மூக்கனுக்கு பாத்தியப்பட்து என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்திய நபர்களின் மூல ஆவணம் கைவசம் இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 2, 3 நபர்களுக்கு ஆவணம் ஏற்படுத்தியுள்ள இடத்தில் வீடு இல்லை என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் இருவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் 2வது நபரின் தந்தை பெயர் திருமலை வேளாளர் என்றும் 3 வது நபரின் தந்தை பெயர் திருமலையாண்டி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இரண்டும் ஒரே நபர்தான். அதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய முடியும்.

பி,வா.ச.ஆ.1 ஆவணத்தை உரிமையில்லாத நபர்களிடம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்தின் உள்ள செட்டிற்கு மேல்பக்கம் கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். வழக்கின் 2வது தபசில் சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும் மேற்படி சொத்தை பொறுத்து வாதி எந்த ஆவணமும் ஏற்படுத்திக் கொடுக்காத நிலையில் 2வது தபசில் சொத்தை பொறுத்து 2வது பிரதிவாதிக்கு உரிமம் இல்லை என்றால் சரிதான். **பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தை பொறுத்து நாங்கள் இடத்தை கையகப்படுத்தவில்லை என்றால் சரிதான் நாங்கள் கையகப்படுத்தும் போது வாதிகள் பிரச்சனை செய்துவிட்டனர். (நீதிமன்ற கேள்வி)**

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ள 5 நபர்கள் வீடு வரிசையாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறிருக்கும்

சமயத்தில் தபசில் விவரம் தனித்தனியாக தான் குறிப்பிடவேண்டும் என்று சொன்னால் பிராது 2வது தபசில் சொத்தும் அதனை சேர்ந்தனையாக உள்ளது சுமார் 50 ஆண்டுகாலமாகவே பாதையாக தான் பயன்படுத்தி வருகிறது எனவே பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்திய நபர்கள் வாதியின் பங்கையும் சேர்த்து தான் ஏற்படுத்தியுள்ளனர். நீதிமன்ற ஆணையர் ஸ்தல ஆய்வு செய்யும் போது நான் 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் சேரவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆணையர் வரைபடத்தில் கிருஷ்ணன், சக்திவேல் (பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 2 மற்றும் 3 நபர்கள்)–ன் வீடுகள் துலங்காது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் கண்டபடி வாதியின் வீட்டிற்கு கீழ்புறத்தில் பாதையுள்ளது என்றும் அதன்படி 1ம் தபசில் சொத்தில் தென்வடல் அளவை அளவீடு செய்ய இயலும் என்றால் சரிதான். 2வது தபசில் சொத்தில் மரங்கள் உள்ளது என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்திற்கு மேல்பக்கம் தென்வடல் நீளமான சுற்றுச்சுவர் உள்ளது என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்து சேர்ந்தனையாக செல்ல இயலாது என்றால் சரிதான். அதேபோல் 2ம் தபசில் சொத்திற்கு மேல்பக்கமாக வாதியின் வீட்டை தாண்டி செல்லமுடியாது என்றால் சரிதான். 2வது தபசில் சொத்தின் முன்புள்ள இடத்தை வாதி, ராஜேந்திரன் மற்றும் மூக்கன் ஆகியோர்கள் தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும் வெளிநபர்கள் பயன்படுத்திவரவில்லை என்றாலும் சரிதான்.

2ம் பிரதிவாதி வழக்கு சொத்தை பொறுத்து தெருவிளக்கு மற்றும் சாலை அமைப்பதற்கு எந்த தீர்மானும் தாக்கல் செய்யவில்லை என்றால் எங்கள் அலுவலகத்தில் தீர்மானம் உள்ளது. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 உரிமையில்லாத நபர்களிடமிருந்து ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றாலும் சட்டப்படி அது செல்லத்தக்க

ஆவணம் என்றாலும் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு எந்த உரிமமும் இல்லை என்றும் 2ம் பிரதிவாதி கோரியுள்ள எதிரிடை கோரிக்கை கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் அவர் கோரியுள்ள நிரந்தர பரிகாரம் அவருக்கு கிடைக்கக் கூடியது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புடைகப்படம் பிராது தபசில் சொத்து உள்ள இடம் என்றால் சரிதான் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.10 உள்ள வீடானது சுமார் 30, 40 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்டது என்றால் எனக்கு கட்டித்தின் வயது சரியாக உத்தேசிக்க இயலவில்லை. இந்த கேள்வியானது 2ம் பிரதிவாதி தரப்பில் கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்படுகிறது. மேற்படி கட்டடித்தை பற்றியும் புகைப்படத்தை பற்றியும் ஆட்சேபனை தெரிவிக்கப்படுகிறது.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

District Munsif, Shenkottai